சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.84/2024</u>

17.11.2025

வா.சா.2 திருமதி. கஸ்தூரி, க/பெ. சங்கர்

**<u>1,3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞர் படித்து சொன்னார். முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொன்னார் என்றால் வழக்கறிஞர் சதாசிவம் சொன்னார். உயிலில் கண்ட சொத்தின் சர்வே எண், செட்டில்மெண்ட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் உயில் எழுதிவைத்ததும் செட்டில்மெண்ட் எழுதிவைத்ததும் எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்திற்கு 2 ஆம் பிரதிவாதி மோகன் வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எனது அக்கா ஜெயந்தியை விசாரணை செய்யும்போதும் மோகன் வந்தாரா என்றால் வந்தார். எனது தகப்பனார் இறந்து 2 நாட்கள் கழித்துதான் இறந்த விவரமே தெரியும். எனது அக்காவிற்கும் இரண்டு நாட்கள் கழித்துதான் தெரியும். எனது தகப்பனார் எப்படி இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது உயில், செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு உயில்படி சொத்து உயிலில் கண்ட நபருக்கு சொத்து பாத்தியப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எனக்கு திருமணமாகி 25 வருடங்கள் ஆகிறது. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள். பெரிய மகனுக்கு 24 வயதும், சிறிய மகனுக்கு 18 வயதும் ஆகிறது. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2, 5, 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என கூறியதன் பேரில் சாட்சியம் முடிக்கப்பட்டது.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.